[1973 நவம்பர் 28

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின்கீழ் சம்பந்தப் பட்ட தொழிலாளர் இழப்பீட்டு ஆணையாளர் தீர்ப்பளித்த இழப் பீட்டுத்தொகை எக்காரணத்தினாலாவது வசூல் செய்ய இல்லாமல் இருக்கும்பொழுது விபத்தின்பொழுது நிலையான அங்கஹீனமுற்ற தொழிலாளருக்கோ அல்லது தொழிலாளர் இறந்துபடின அன்னாரைச் சார்ந்திருந்த உறவினருக்கோ இந்நிதியிலிருந்து உதவி கிடைக்கும்.

(உ) ஒருவருக்கு ரூ. 1,000 இந்நிதியிலிருந்து அளிக்கப் பட்டது.

திறமையுள்ள தொழிலாளர்களுக்கு நிர்வாகப் பயிற்சி

*476 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

திறமை படைத்த தொழிலாளர்களை தேர்ந்தெடுத்து அவர் களுக்கு நிர்வாகத் துறையில் பயிற்சி அளிக்கும் உத்தேசம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : திறமை மிக்க தொழிலாளர் களுக்குத் தொழில் நிறுவன நிர்வாகத்தில் பயிற்சி அளிப்பதற் கான செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திருப்பூருக்கு மின் வழங்கல்

*477 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :—

(அ) திருப்பூர் மின்வாரியத் துணை நிலையத்தில் Sub-station மின் சக்தியின் அழுத்தம் குறைவாக இருப்பதின் காரணமாக தொழில்கள் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா ?

(இ) ஆமெனில், அதன்மேல், எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?